**IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM**

O.S. No.332/2020

சாட்சி : PW2

பெயர் : சக்திவேல் தேதி: 21.11.2025

(Evidence recorded from 05.05 p.m. to 05.20 p.m.)

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

நான் +2 வரை படித்துள்ளேன். ஏடிசியில் டிரைவராக வேலை பார்க்கிறேன். இந்த தாவாவில் ஒரே ஒரு பிரதிவாதிதான். எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றாலும், இந்த வழக்கில் இரண்டு பிரதிவாதிகள் உள்ளார்கள் என்றாலும் – அதுபற்றி எனக்கு தெரியாது. எனது சாட்சியத்தின் மூலமாக இந்த தாவாவில் எந்த ஆவணமும் குறியீடு செய்யப்படவில்லை என்றால் – சரிதான். தாவா புரோ நோட்டை தயார் செய்வதற்கு நான் உதவி புரிந்துள்ளேன் என்றால் – சரியல்ல. வாதி ரங்கசாமி என் வீட்டிலிருந்து ஒரு கிலோமீட்டர் தொலைவில் உள்ளார். வாதிக்கு 80 வயதுக்கு மேல் இருக்கும் என்றால் – சரிதான். அவர் +2 வரை உள்ள பள்ளியில் வாத்தியாராக இருந்து ஓய்வு பெற்றுள்ளார். அவர் ஓய்வு பெற்று சுமார் 15 ஆண்டுகள் ஆகிறது.

தாவா புரோநோட் 18.04.2018 அன்று எழுதப்பட்டது அன்று என்ன கிழமை என்று எனக்கு தெரியாது. அன்றைய தினம் எத்தனை மணிக்கு எழுதப்பட்டது விடுமுறை தினமா என்ற விபரம் நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் – சரிதான். வாதி தாக்கல்

செய்த வழக்கு விபரம் தெரியுமா என்றால் கடன் தொகை கொடுத்த விபரம் தெரியும். ரங்கசாமி தனியாக தான் வசித்து வருகிறார். அவர் பெண்களுக்கு திருமணம் செய்து கொடுத்துவிட்டார், அவர்கள் தனித்தனியாக வசித்து வருகிறார்கள். மேற்படி ரங்கசாமி கடன் கொடுப்பதற்கு உரிமம் பெற்று வைத்துள்ளாரா என்று எனக்கு தெரியாது.

ராஜு என் நண்பர். மேற்படி ராஜு மேட்டுப்பட்டியில் திருமலை பைனான்ஸ் என்ற நிறுவனம் நடத்தி வந்த விபரம் எனக்கு தெரியாது. மேற்படி ராஜு இன்று நீதிமன்றத்திற்கு வந்தார் சென்று விட்டார். ராஜுவை 15 ஆண்டுகளாக தெரியும். ராஜு காளிபட்டியில் வெங்கடேஸ்வரா பைனான்ஸ் வைத்திருந்த விபரம் எனக்கு தெரியாது. நானோ என் குடும்பத்தாரோ ராஜுவின் பைனான்ஸ்ல் பங்குதாரர்கள் இல்லை. ராஜு உடன் எனக்கு வரவு செலவு இல்லை. தாவா புரோநோட் பான்ட் பேப்பரில் எழுதப்பட்டது. 20 ரூபாய் பத்திரத்தில் எழுதப்பட்டது. Revenue stamp மீது நான் கையெழுத்து போட்டேனா என்றால் போட்டேன்.

பிரதிவாதிகளிடம் வரவு செலவு இல்லை, பார்த்தால் பேசுவேன், உள்ளூர்காரர். மேற்படி பிரதிவாதிகளை எனக்கு தெரியாது என்றாலும் எனக்கு அவர்களுடன் எந்த பழக்கவழக்கமும் இல்லையென்றாலும் ராஜுவிற்காக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் – சரியல்ல. தாவா கடன் தொகையை கொடுக்கும் அளவிற்கு வாதிக்கு வசதி வாய்ப்பு இல்லை என்றால் – சரியல்ல. அவருக்கு எவ்வாறு வருமானம் வருகிறது என்று எனக்கு தெரியாது, விவசாய நிலம், வீடு உள்ளது. எவ்வளவு நிலம் என்று தெரியாது, அதில் விவசாயம் செய்து வருகிறார்கள்.

எனது நண்பர் ராஜு வேறு ஒரு வழக்கறிஞரிடம் செக்யூரிட்டிக்காக கொடுக்கப்பட்ட புரோநோட்டை பெற்று இந்த வழக்கை ரங்கசாமி மூலம் போட்டதாக பிரதிவாதி கூறுகிறார் என்றால் – எனக்கு அதுபற்றி தெரியாது. பிரதிவாதி சொல்வது போல கடன் தொகை எதுவும் வாங்கியிருக்கவில்லை என்றாலும் நான் சொன்ன நேரத்தில் புரோநோட்டில் கையெழுத்து எதுவும் செய்திருக்கவில்லை என்றாலும் – சரியல்ல.

என்னுடைய முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகள் எனக்கு தெரியாது என்றாலும் நான் ராஜுவிற்காக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் – சரியல்ல. எந்த இடத்தில் புரோநோட் எழுதப்பட்டது என்ற விபரமும் தொகை என்ன ரூபாய் நோட்டுகளாக கொடுக்கப்பட்டது என்ற விபரமும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். ராஜு தயாரித்த புரோநோட்டிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் என்னுடைய சாட்சியம் நிராகரிக்கப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

ஒம்/– S. எழில் வேலவன்
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.